**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–2

O.S.No.540/2023

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. ஏ. முத்துசாமி | வயது:48 |
| த/பெ. : திரு. எஸ். அர்சுணன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர் இல்லை. பிரதிவாதி தோன்ற தரப்பினராக உள்ளார். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சம்மன் வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்சமயம் கோயமுத்தூர் LIC housing finance ltd ல் மேலாளராக பணிபுரிகிறேன். சாட்சி சம்மன்னில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். வாதி எங்கள் நிறுவனத்தில் ஹவுசிங் லோன் வாங்கியுள்ளார். அவ்வாறு கடன் பெற்றபோது எங்கள் நிறுவனத்தில் அவருடைய நிதி நிலை விவரங்கள், வங்கி கணக்கு பரிமாற்றங்கள் மற்றும் வசுமதி என்பவருடைய சம்பள சான்று, வசுமதியின் வங்கி கணக்கு விவரங்கள் ஆகியவை எங்களிடம் நகல்களை கொடுத்தார். **வா.சா.ஆ– 1** ல் அசல் ஆவணம் எடுத்து வந்துள்ளேன். **வா.சா.ஆ– 2, 8** ன் படி வாதி பெயரில் உள்ள ICICI வங்கி கணக்கு விவரங்கள். **வா.சா.ஆ– 2,8** வங்கி கணக்கில் இருந்துதான் எங்களிடம் தாவா சொத்தை அடமானம் ஏற்படுத்திய பிறகு மாத தவனைக்கள் வந்து கொண்டு இருக்கிறது. 2009 வருடத்திலிருந்து கடன் மாத தவனைகள் வங்கி பரிமாற்றம் மூலமாக தான் ஏற்பட்டுள்ளது. சில சமயங்கள் நேரடியாக தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. அதன் அனைத்து விவரங்களும் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் உள்ளது. இன்று வரை வாதி தான் கடன் நிலுவை தொகைகளை வங்கி பரிமாற்றம் மூலமாகவும் நேரடியாகவும் செலுத்திவருகிறார். கடன் தவனைகள் நிலுவையில் உள்ளது. சாட்சி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சா.சா.ஆ– X1. தாவா சொத்தை பொறுத்து உள்ள கிரைய ஆவணம் வாதி, பிரதிவாதி பெயரில் கூட்டாக

உள்ளது. தற்சமயம் எங்களிடம் தாவா சொத்தை வைத்து அடமான பெற்ற கடனை வாதி செலுத்திவருகிறார். பிரதிவாதி தவனை கடன்களை செலுத்தவில்லை.

நீதிமன்ற கேள்வி

1.**கேள்வி**

உரிமை ஆவணத்தின் படி தாவா சொத்திற்கு கடன் கொடுத்துள்ளீர்களா?

**பதில்**: ஆமாம்

2. **கேள்வி**

உரிமை ஆவணத்தில் உள்ள நபர்கள் அனைவரும் திருப்பி செலுத்தவேண்டுமா அல்லது ஒரு உரிமையாளர் கடன் தொகையை செலுத்தினாலே ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்**: ஒருவர் செலுத்தினாலே ஏற்றுக்கொள்வோம்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.12.02 18:13:42 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.